MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS-41

Reg. No. M.

தனிப்பிரிதி 1 அணு

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

LE DIRECTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOI, I. { புதுவை, ஸ்ரீமுகவருஷ கார்த்திகைமீ உக உ (14—12—33) } No. 3

தேவாரம்.

தரைமுதலுலகினிலுயிர் புணர் தகை மிக
விரைமலி குழலுமை யோடு விரவது செய்து
நரை திரை கெடுதேகவது வருளினனெழில்
வரை திகழ்மதில் வலிவல முறையிறையே.

மக்களே மணந்த தாரமவ்வயிற்றவரை யோம்பும்
சிக்குளேயழுந்தி யீசன்றிறம் படேன்தவமதோரேன்
கோப்புளே போலத் தோன்றியதனுளே மறையக்கண்டும்
இக்களேபரத்தை யோம்பவேன் செய்வான் றேன்றினேனே.

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசி நோய் செய்தபறிதான்
றாழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணன் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதார மெனீரே.

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்.

புதுவை,
ஸ்ரீமுக கார்த்திகை மீ 29உ

தத்துவப்பெரியார் நூல்கள்

தத்துவப் பெரியார் என்பவர் யார்? அவர் தாம் தத்துவங்களைக்கண்கூடாக—அநுபவமாகக் கண்டு அறிந்த வித்தகராவர். அஃதாவது கயிலைமுதற் குரவனாகிய சற்குருநாதன் அருளால் வாய்மையான சாதகயோகங்களை வழுவற அநுட்டித்துக் காயமாயம் கழிந்து—மாதிப்பிறந்து தங்கள் உள்ளும் புறம்பும் ஓவாது ஒலிக்கும் வாய்மையான வேதங்களை ஓதிஉணர்ந்து—தத்துவங்களைக் கண்கூடாகக்கண்டு அது அதுவான மெய்யடியாரே, நாத அந்தமாகிய வேத அந்தத்தை அணவிய அந்தணரே தத்துவப்பெரியார் எனப்படுவர் என்பது. இவர் தமது அநுபவ உண்மைகளைப் பக்குவ சீவர்கள் அறிந்து உய்யுமாறு இயற்றிய பாடல்களே-நூல்களே தத்துவப்பெரியார் நூல்கள் எனப்படுவனவாகும். அவை தாம் இருக்கு யசுர் முதலியனவும், தேவாரம் திருவாசகம் திருமந்திரம் திருவாய்மொழி முதலியனவும், வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்குவனவுமாகும்.

உண்மையை உணர்வதற்கு—உணர்த்துவதற்கு வியாபகமே வியாபகம் என்னும் ஒலிவரிவடிவே—பாஷையே வாயிலாதலால், தத்துவப் பெரியார் தாம் கண் கூடாகக் கண்ட உண்மைகளை — தத்துவ இயல்புகளை அவ் ஒலிவரிவடிவமாகிய பாஷைவாயிலாக வெளியிட்டுள்ளனர். வேத உண்மைகளாகிய அரிய பெரிய இரகசியங்களை உணர்த்துவதால், கௌணமாக—மறைபொருளாகக் கூறுவதால் இந்நூல்களும் வேதங்கள் எனவும் மறைகள் எனவும் கூறப்படுவனவாயின. வியாப்பியம் எனவும் எழுதாமறை எனவும் ஆரியம் எனவும் கூறப்படும் கௌண நிலையினின்றும் கௌணம் என்னும் ஒலிவரிவடிவமற்ற காரணத்தினின்றுப் வியாபக ரூபமானதே—காரியப்பட்டதே ஒலிவரிவடிவமான பாஷை என்பது. தமிழ் எனப்படுவது இதுவே என்க. தமிழ் என்பது ஒலிவரிவடிவமான பாஷைகளுக்குப் பொதுப்பெயராகும். இவ் வியாப்பிய வியாபகங்களே "ஆரியமும் தமிழும்" என்று தத்துவப்பெரியோரால் திருமறைகளில் போற்றப்பட்டனவாகும். கால தேச வேறுபாட்டால் பாஷை வேறுபாடடைவது இயல்பேயாகும். உலகில் வழங்கும் தமிழ் சம்ஸ்கிருதம் முதலியன ஒலிவரிவடிவமான பாஷா பேதங்களாம். ஆதலால் வலிவடிவங்களுக்கு உயர்வு தாழ்வு கற்பித்தல் முறையாகாது என்க. இவற்றின் உண்மைகள் அமயம் நேர்ந்துழி விரித்துக் கூறப்படும்.

தத்துவப் பெரியார் நூல்களில் அரிய பெரிய வேதாகம உண்மைகளே—அநுபவ உண்மைகளே நிறைமுறையோடு கூடிய கற்பனை மலிந்த செய்யுட்களால்—பத்திச் சுவை மலிந்த தோத்திரங்களால், கற்பனைக் கதைகளால் கௌணமாக—மறைபொருளாகக் கூறப்பட்டிருக்கும். பக்குவம் பெறாத உலகத்தவர்க்குப் புலப்படுமாறு வெளிப்படையாய் யாதும் கூறப்பட்டிருக்க மாட்டாது. ஆசான் அருளின்றி இவற்றின் உண்மைப் பொருளை அறிதல் முடியாத காரியமே. தத்துவப் பெரியார் கற்பனைகள் நிறை முறை தழுவியனவாதலால் அவற்றால் உண்மையே உணரப்படும். மற்றைய நிறை முறை தழுவாக் கற்பனைகளால் பொய்யே உணரப்படும். சம்ஸ்கிருதத்திலும் தான் தமிழிலும் தான் எழுதப்பட்ட தத்துவப் பெரியார் நூல்கள் எல்லாம் முத்தி நிலையையும் அந்நெறியில் செல்லுதற்கண் அவ்வப் பெரியார் அடைந்த அநுபவ உண்மைகளையுமே மறை பொருளாகக் கூறுவனவேயன்றி, சீவர்கள் எல்லாம் கைக்கொண்டு ஒழுகி முத்தியடைதற்கேற்ற விதிகளை அஃதாவது அவ்வச் சீவர்களது சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு எற்ற சாதக யோக விதிகளைக் கூறுவனவாகா. அவை, அளவுபடாதனவாகலின், அவ்வப் பக்குவ சீவருக்கே முன்னிலையில் குருவடியாய்ப் போதரும் இறைவனால் அருளப்படுவனவாகும். இதுபற்றியே "தத்துவமசி" அநுட்டானமாகிய அங்கலிங்க ஐக்கிய நெறியைக் குருமுகமாகவே அறியவேண்டும் என இந்நூல்கள் வற்புறுத்துவனவாயின என்பது. உண்மை நெறியாகிய குருநெறி ஒன்று உண்டு என அதனை நாடும் நெறியையே இந்நூல்கள் பல்லாற்றானும் வற்புறுத்துவனவேயன்றி, இவைகளே சீவர்களை நேரே முத்தி வாயிலில் சேர்ப்பிக்கமாட்டா என்பது வெள்ளிடை. மெய்யடியார் தாம் குருமுகமாய் அறிந்து கைக்கொண்டு ஒழுகிய சாதகயோக விதிகளை உலகத்தவர் அறியுமாறு வெளிப்படுத்தாதது என்னை? எனின், அவற்றால் உலகம் அடையும் பயன் யாதும் இல்லை என்

பதே உத்தரமாகும். ஒருவர் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கு ஏற்ற விதிகள் மற்றொருவருக்குப் பொருந்துவது எப்படி? உலகத்தவர் அவற்றை உணரவும் மாட்டார்; ஒப்புக்கொள்வதும் அரிதாகும். அவை நகைப்புக்கு இடமாயினும் ஆம். “நாமவனைப் பூசை செய்த மார்க்கந்தன்னை நாட்டிலே சொல்ல என்றால் நகைப்பார்காணே” என்றனர் கருவூரார். ஆதலால், அவர் தாம் கைக்கொண்டு ஒழுகிய சாதக விதிகளைப் பிறர்க்குத் தெரிவிக்க உடன்படமாட்டார்-எழுதிவைக்க மாட்டார் என அறிக.

மெய்யடியார்—சித்தர்கள்—இருடிகள்—முனிவர்கள் அருளிய நூல்களின் உண்மைப் பொருளைப் பக்குவம் இல்லாத உலகோர் அறிவது முடியாத காரியமே. அஃதாவது கீழ் ஆதாரங்களில் நின்று உழலும் பெற்றியுடைய உலகோர் மேல் ஆதாரங்களில் நின்று நிலவும் மாண்புடைய வித்தகர் அருளிய அநுபவ உண்மைகளை அறிவது அசாத்தியமே என்பது. உலகோர் தங்கள் அறிவிற்கு ஏற்றவாறே அவற்றைப் பொருள் செய்வர்—அநர்த்தம் செய்வர். அத்தத்துவப் பெரியார் எவ்வெத் தத்துவங்களைக் கண்கூடாகக் கண்டு அது அது ஆனபின் அவ்வத்தத்துவ இயல்புகளை எவ்வெவ்வகையான கௌண பதங்களால்—பரிபாஷைகளால் அருளிச் செய்தனர் என்பதை அவ்வவ் அனுபவங்களை ஒருவாற்றானும் அறியமுடியாத உலகோர் அறிவது எப்படி? கண்ணிலாப் பிறவிக் குருடன் ஞாயிற்றின் கதிரொளியைக் கண்டு அதன் இயல்பைக் கூறமுடியுமா? எண்ணிலிகாலம் தவம் இயற்றி எண்ணிலிகாலம் சரியைக் கிரியைகளை அநுட்டித்து அவற்றால் சரீரமும் மனமும் சிறிது தூய்மை அடைந்து கட்டுக்கள் அற்று வீடு பெறவேண்டும் என்னும் அவா மீதூரப் பெற்று அதனைப் பெறுதற்குரிய சாதகங்களை அறிவிக்கும் ஞானசாரியன் (நம்மைத் திருத்தி அமைக்கும் எல்லாம் வல்ல சித்தன்) எங்குளன் என்ற தேட்டம் உளதாகி அத்தேட்டமேலீட்டினால் அவ் எல்லாம் வல்ல சித்தனே ஞானசாரியனாய் முன்னிலையில் போந்து சோதித்து (அஃதாவது அச்சீவனை மேல் அநுட்டிக்குமாறு அமையும் சாதகங்களை வழுவறத் தாங்கி ஒழுகும் பக்குவமுடையனாக்கி) வினைகளின் இயல்பறிந்து நிறை அறிந்து அவ்வவற்றிற்கு ஏற்ற சாதகங்களை அருளிச் செய்ய, முன்னிலைக் கோரணிகளால் வரும் நன்மை தீமைகளைப் பொருட்படுத்தாது திருவருணாட்டம் வகித்து அச்சாதகங்களை வழுவறத் தாங்கி ஒழுகி அதனால் வினைகள் அணுஅணுவாக நீறி நல்வினையும் தீவினையும் சமமுற்று (கெட்டுத்திரிந்து) முன்னிலை ஆசானைத் தன்னிலையில் கண்டு—நந்தி ஒளி கண்டு முன்னிலையே தன்னிலை எனவும் தன்னிலையேமுன்னிலை எனவும் அநுபவமாக உணர்ந்து ஆனந்தம் உண்டு உவகைமேலீட்டினால் அருளிச் செய்யப்பட்ட மெய்யடியார் பாடல்களுக்கு, மனம் போல உண்டு உடுத்து வாழ்ந்து குருட்டுப் பார்வையால் முன்னிலைகளைக் கண்டு களித்துப் பிறவிக்குருடனுக்கு ஞாயிற்றின் ஒளி தெரியாதது போல ஞான ஒளி இன்னது என அறியாது இருளையே ஒளி என நம்பி மகிழ்ந்து ஆகாமியங்களை ஈட்டிச் சாதலை எதிர்பார்த்த பாவிகளாய் வீற்றிருக்கும் அவரோகண மதியுடைய உலகோர் பொருள் காண்பது என்றால் அது முயற் கொம்பேயாகும் என்பதனைச் சொல்லவும் வேண்டுமா? மெய்யடியார் ஒழுக்கங்களையும், சாதக யோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகுதற்கண் அவர் அடைந்த அளவிறந்த துன்பங்களையும் உலகினர் அறியமாட்டார். மெய்யடியாரும் உண்மைச் சித்தர் பெருமக்களுமாகிய தத்துவப் பெரியார் திருவருள் இயக்கத்தின் பயனாய்க் காலந்தோறும் தோன்றித் தமது திருவாக்கானும் அரும்பெரும் செயலானும் நிலை நாட்டியருளிய சத்திய நெறியினாலன்றோ புண்ணிய பூமி எனப்படும் இத்தமிழ் நாட்டில்—பரதகண்டத்தில் மூர்த்தி தலம் தீர்த்தங்களும் கடவுள் வழிபாடும் சிறப்புற நின்று நிலவுகின்றன. சிவகாருண்ணிய மூர்த்திகளாகிய அன்னவர் அளித்த திருவருட் பிச்சையாலன்றோ நாம் திருவருளை மறவாது உய்தியடைகின்றோம். காலந்தோறும் தோன்றிச் சத்திய நெறியாகிய சைவ நன்னெறியை நிலைநாட்டிய புண்ணியர் அவரே யன்றோ! அவர் பெரு நன்றி இன்று மறக்கவும் படுமா?

தத்துவப் பெரியார் பாடல்கள் என்று தற்காலம் தமிழில் வழங்குவன மிகச் சிலவேயாகும். அரிய பெரிய தேவாரத் திருமுறைகளுள்ளே பெரும்பாகம் நம்மனோர் தீவினையால் அழிந்து ஒழிந்தன. எஞ்சியனவாய்த் தற்காலம் வழங்குவனவற்றினும் இடைச் சொருகல்களும் திரிபுகளும் இல்லை என்று சொல்லவும் முடியாது. இருக்கு முதலிய சமஸ்கிருத வேதங்களிலும் இடைச் சொருகல் முதலியன உண்டெனக் கூறுவாரும் உளர். இச்சம்ஸ்கிருத வேதங்களின் மாண்பு அமையம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும். திருவாசகம் இடைச் சொருகல் இன்றி மிளிர்கின்றதாயினும் சிற்சில பதிகங்களில் சிலபல செய்யுட்கள் காணப்படவில்லை. திருமந்திரத்தில் பல இடைச் சொருகல்களும் திரிபுகளும் ஏற்பட்டுவிட்டன. திருமூலர் அருளியன மூவாயிரம் எனப்படும்.

“ மூலனுரை செய்த மூவாயிரந்தமிழ்
ஞால மறியவே நந்தி யருளது
காலை யெழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவரன்றே.”
(திருமந்திரத் தொகைச் சிறப்பு. செ. 1.)

என்பது திருமந்திரம். அச்சுப்பிரதிகள் சிலவற்றில் எண்பதும் சிலவற்றில் நாற்பதும் சிலவற்றில் முப்பதும் பிறவுமாய்ச் சிலபல செய்யுட்கள் மிகையாய் இருப்பதன் காரணம் என்னை? இவை யெல்லாம் திருமுறைகளின் அருமை பெருமைகளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத சிலரால்

சேர்ந்த தவறுகள் என்றே கூறவேண்டியதாகின்றது அல்லவா? எங்ஙனமாயினும் இடைச் சொருகல் என்று தோன்றுவன சில போக எனைய பாடல்கள் எல்லாம் சத்திய நெறியையே தம்முட்கொண்டு மிளிர்தலால், மேல் உண்மை நிலைநாட்டப்படுதற்கு அவைகளே தக்க பிரமாணங்களாய் அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை.

வாய்மையான சித்தர் நூல்கள் என வழங்குவன மிகச் சிலவே. சித்தர்கள் அருமை பெருமைகளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத சிலர் தாமாகவே சிலபலவற்றை எழுதிச் சித்தர் நூல்கள் என வெளியிட்டும் அத்திருமறைகளுள்ளே சொருகியும் பழுது புரிந்தனர் என்பது மறுக்க முடியாததே. மிகப் பதனமாகப் பேணப்பட்ட திருமந்திரமே இடைச் சொருகலும் திரிபுகளும் இன்றி இருக்க முடியவில்லை என்றால், கேட்பார் அற்றுக்கிடந்த சித்தர் நூல்களைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ? சித்தர்கள் தங்கள் நூல்களில் சரியை கிரியைகளையும் இகழுகின்றார்கள் எனவும், அந்நூல்கள் இலக்கண வழுக்கள் உடையன எனவும் பலர் குறைகூறி அவ் ஆரிடக் கவிகளைப் புறக்கணிப்பதும் வழக்கில் உண்டு. சித்தர்கள் இயற்றிய நூல்கள் இவை இவை எனவும் இத்தனை எனவும் அறிந்து அந்நூல்கள் முழுவதையுமாவது அவர்களுள் ஒருவர் இயற்றிய நூல்கள் முழுவதையுமாவது தேடி ஆராய்ந்து பார்த்தால் அச்சித்தர் பெருமக்கள் சைவச் சரியை கிரியைகளை இகழுகின்றார்கள் என்று சாட்டுக்கூறி அத்திருமறைகளைப் புறக்கணிக்க முடியுமா? முடியாது. சித்தர்கள் ஒவ்வோர் பக்குவங்களுக்கு ஏற்ற மார்க்கங்களையே ஒவ்வோர் நூலால் போதிப்பார்கள். அவர்கள் போதிக்கும் முறையையும் பரிபாஷைகளால் உணர்த்தும் உண்மைகளையும் ஆராய்ந்து அறியவேண்டும். இந்த நூல்களுள்ளே சில பாதுகாப்பார் இன்மையாலும் நன்கு பரிசோதித்து அச்சிடப்படாமையாலும் எழுத்துப் பிழை சொற் பிழைகளோடு சொரூபம் சிதைந்து கிடக்கின்றன. தமிழ் நாட்டில் இங்கும் அங்குமாய்ச் சொரூபம் சிதைந்து அரிதாய்க் கிடைக்கும் இந்நூல்கள் நன்கு பரிசிலனம் செய்யப்பட்டு நல்ல தாளில் அழகுற அச்சிட்டு வெளியிடப்படுமானால் இலக்கண வழுக்கள் உடையன என்பதுபோன்ற சாட்டுக்களால் புறக்கணிக்கப்படாது யாவராலும் போற்றப்படும் என்பதில் ஐயம் உண்டோ?' இல்லை. இல்லை. ஆரிடமான கவிகள் உலகியற் செய்யுட்கு ஓதிய இலக்கண முறைக்கு மிக்கும் குறைந்தும் வருவன என்பதும், அவ் இலக்கண முறை நோக்கியே அவை இயற்றப்படுவனவல்ல என்பதும் அவ் ஆரிடம் பாடுதற்கு உரியார் ஒலிகட்கெல்லாம் பிறப்பிடமாகிய நாத பீடத்தை அநுபவமாகக் கண்டுணர்ந்து ஆக்கவும் அழிக்கவும் வல்லவராய் முக்காலமும் உணர்ந்த இருடிகள்—முனிவர்கள்—சித்தர்கள்—மெய்யடியார்கள் என்பதும் அறிஞர் யாவரும் நன்கு அறிந்தனவேயாம். மாயாசித்திகள் காட்டும் போலிச் சித்தரையே உண்மைச் சித்தர் என மயங்குவது உலகியல்; போலிச் சித்தர்க்கும் அருட் சித்திகள் காட்டும் உண்மைச் சித்தராகிய மெய்யடியார்க்கும் இடையீடு அளவிடற்கரியது; உண்மைச் சித்தர் இலக்கணத்தைப் பின்வரும் வேதவாக்கு நன்கு புலப்படுத்தும்.

திருமந்திரம்

“வெளியின் வெளிபோய் விரவிய வாறும்
ஒளியி னொளிபோ யொடுங்கிய வாறும்
அளியி னளிபோ யடங்கிய வாறும்
தெளியு மவரே சிவசித்தர் தாமே”

“சித்தர் சிவலோக மிங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முட்
[கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தமுத்தி முதன்முப்பத் தாறே

(1-ம் தந்திரம், உபதேசம் செ. 12, 13.)

வாய்மையான சித்தர் நூல்களுக்கும் தேவாரம் திருவாசகம் முதலியன வற்றிற்கும் பேதம் காண்பது அரிது. இவ் உண்மைகள் அமையம் நேரும் தோறும் விளக்கிக் காட்டப்படும்.

“திருநான் மறை முடிபு”

எனப்பட்ட முக்கியமான உபநிடதங்களும் தேவாரம் திருவாசகம் முதலியனவும் வாய்மையான சித்தர் நூல்களும் ஒரே முடிபினை உடையனவாகும். பாஷையால்—சொற்களால் வேறுபடுவன வாயினும் பொருளால் வேறுபடுவனவாகா. ஏனெனின், தத்துவப் பெரியார் அநுபவ உண்மைகள் ஒன்றே என்பது அறிஞர்யாவர்க்கும் ஒப்பமுடிந்ததேயாதலின் என்க. இயற்கை முறையும் இதுவே என்பது வெள்ளிடை. இவ் உண்மைகளுள்ளே சில இங்கே காட்டப்படுகின்றன.

அதர்வம் மாண்டுக்கியம் முதலிய உபநிடதங்களில் பிரணவன் சிவனே என்று கூறப்படும். “மூன்று மாத்திரையுடைய பிரணவ அக்ஷரத்தால் எவன் பிரமத்தைத் தியானிக்கின்றானோ அவன் தனது உடலுள்(மறைபொருளாய்க்) கிடப்பதும் அப்பாற்பட்டதுமாய் உள்ள அந்தப்பரம் பொருளாகிய பிரமத்தைக் காண்கிறான் (அடைகிறான்)” என்று பிரச்சினோப நிடதம் கூறுகின்றது.

(பிரஸ்நோபநிஷத்-அதி. 5.5.)

“ய: புநர் ஏதத் த்ரிமாத் ரேணைவ ஓம் இதி ஏதேநைவ அக்ஷரேண பரம் புருஷம் அபித்யா யீதஸ: பராத் பரம் புரிசயம் புருஷம் ஈக்ஷதே”

“புரிசயம் புருஷம்” “பராத்பரம்” என்பன “உற்ற ஆக்கையின் உறுபொருள்” “பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள்” (திருவாசகம்) என்பனவற்றின் பொருளையுடையன. “ஓங்காரத்துட் பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு.........”(ஷடி

அச்சோப்பதிகம் செ.7.)என்பதனல் மகரவித்தை என்னும் பிரணவ உபதேசத்தால் உற்ற ஆக்கையின் உறு பொருளாகிய சிவம் காணப்படுதல்—அடையப்படுதல் நன்கு பெறப்படும். ஸ்ரீ உருத்திரசம்ஹிதையில் ரதி என்றும் ரதிபதி என்றும் சிவபெருமானுடைய திருநாமங்களே கூறப்பட்டிருக்கின்றன. ஓங்காரமே ரதம் என்று கூறப்பட்டது. சித்தர் நூல்களில் மகாரப்பெட்டேப — மகரவித்தையே பலபரிபாஷைகளால் முக்கியமாகக் கூறப்படும்.

"..
மகரவித்தைஆசான்முன் தாண்டிக்காட்டில்
மணிமுதலாய்த் தசநாதங்கேட்குந்தானே"

என அருளிச்செய்தார் சித்தர் பெருமானுகிய சட்டை முனிவர். இவற்றின் உண்மைகளை ஆசான் அருளாலன்றி அறிய முடியாது. இவ் அரிய பெரிய மகரவித்தையை ஆசான் அருளால் பெற்றுப் பயிலாதவன் விடடைதல் முடியாத காரியம். அமிர்தபிந்து உபநிஷத்தில் "சப்தப் பிரமம் பரப்பிரமம் என்று கூறப்பட்டது. பரப்பிரமமானது சப்தாக்ஷரமாய் இருக்கிறது. அந்தச் சப்தம் முடிவானல் எது மிஞ்சுகிறதோ அந்த அக்ஷரத்தை (நாசமற்ற பிரமத்தை) ஆத்மாவுக்குச் சுகத்தைக் கோருகிற வித்வானுனவன் தியானிக்க வேண்டியது. இரண்டுவித்தையானது தெரிந்துக் கொள்ளத்தக்கது. அஃதாவது சப்தப் பிரமத்தைச் செவ்வையாய்க் கரைகண்டவன் பரப்பிரமத்தை அடைகிறான்." என்பது அமிர்தபிந்துபநிஷத்து. இதுவே—சப்தப் பிரமமே சித்தர் நூல்களில் "நாதவேதம்" என்று கூறப்பட்டது. எம்பெருமான் திருவடி எனப்படும் அமல ஐகார ஒலி இதுவே. வேதங்கள் சிவ சந்நிதானத்தில் ஒலிப்பன என்பதன் உண்மையும், மறையே—வேதமே சிவவடிவம் என்பதன் உண்மையும் இதுவே. பின்வரும் திருவாக்குக்களும் இவ் உண்மையை நன்கு புலப்படுத்துகின்றன.

திருவாசகம்.

"......மறையுமாய் மறையின் பொருளு
[மாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே,
......இறைவனே நீ என் உடலிடங்
[கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே."
(கோயிற்றிருப்பதிகம் செ.5.)

"இன்பான் மொழிக்கின்னா யெங்கள்
[பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய்—
[அன்பாற்
பிறவிப்பகைகலங்கப் பேரின்பத்தோங்கும்
பருமிக்க நாதப் பறை."
(திருத்தசாங்கம் செ. 8.)

"பருமிக்க நாதப்பறை" என்பதுவே பரநாத முரசு எனப்படும் சுத்த நந்தி நாதமாகும். பின்வரும் சுலோகமும் நாதங்களாகிய வேதங்கள் வழியாகவே சிவபரம்பொருளை அடைய வேண்டும் எனக் கூறுகின்றது.

"ஸ்வரேண ஸந்தயேத்யோகம் அஸ்வரம்
[பாவயேத்பரம்
அஸ்வரேணநுபாவே நபாவோ
[பாவ இஷ்யதே"

என்பது கிருஷ்ண யசுர் வேதஅமிர்த பிந்து உப நிஷத்து.

"யோகத்தை ஸ்வரத்தோடு சேர்க்க வேண்டும். ஸ்வரமின்றிப் பரத்தைப் பாவிக்க வேண்டும். ஸ்வரமில்லாதஅநுபவத்தால் வரும்பாவனை பாவனை என்று விரும்பப்படமாட்டாது (சொல்லப்பட மாட்டாது)" என்பது இதன் பொருளாகும். நாதங்களாகிய வேதங்கள் வழியாகவே சிவசந்நிதானத்தை—சிவனை அடைய வேண்டும் என்பதும், அவை ஆக்க முற்று ஒடுங்கியபோதுதான் சிவமாம் தன்மை பூரணப்படும் என்பதும் திருவாசகம் திருப்படையாட்சி என்னும் பதிகத்தாலும் நன்கு புலப்படும். மெய்யடியார் தம்முள்ளே வாய்மையான வேதங்களைக்கண்டு ஓதி உணர்ந்து நித்தியத்துவம் அடைதலாகிய இவ் வுண்மையையே பின்வரும் சித்தர் பெருமான் திருவாக்கு நன்கு வற்புறுத்துகின்றது.

சிவவாக்கியயர்,

"சாமம் நாலுவேதமுஞ் சகல சாத்திரங்
[களும்
சேமமாக ஓதினுஞ் சிவனை நீரறிகிலீர்
காம நோயைவிட்டுநீர் கருத்துளே
[யுணர்ந்தபின்
ஈனமற்ற காயமாயிருப்ப னெங்கள்
[ஈசனே."

"காமநோயை விட்டு நீர் கருத்துளே உணர்ந்தபின்" என்றதுவாய்மையான வேதங்களை ஓதி உணர்தலைக் குறித்தது. இது மிக ஆழ்ந்த அரிய பொருளையுடையது. அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

பிரமம் ஆனந்தமயம் என்று முனிமொழி எனப்போற்றப்பட்ட வியாசசூத்திரம் (அதி 1. சூத். 13.) கூறுகின்றது. "ஆனந்தம் பிரமம் என அறிய வேண்டும்" என்று தைத்திரியமும் (பிருகுவல்லி அநுவாகம் 6, வாக்கியம் 1.) கூறுகின்றது.சித்தர் நூல்களும் இவ்வாறே கூறுகின்றன.

அகப்பேய்ச் சித்தர்

"இறையவனென்றதெல்லாம் அகப்பேய்
எந்தவித மாகும்
அறையவே நீ கேளாய் அகப்பேய்
ஆனந்த மானதடி."

"...இன்பமே என்னுடைய அன்பே..."
எனவும்,
'இன்பமேஉன்னைச்சிக்கெனப்பிடித்தேன்'

எனவும்;

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்
[னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
...எந்தையேஈசா வுடலிடங்கொண்டாய்.'

எனவும் மணிவாசகப் பெருமான் அருளியனவும் அறிக. சத்தாகிய உடலும் சித்தாகிய உயிரும் அறிவற ஒன்றுதலால் வாய்மையான ஆனந்தம்—பேரின்பம் உண்டாகும். சத்

சிதானந்தம் என்பது இதுவே என அறிக. எம்பெருமான் இன்பவடிவாகவே நம்முட் பூரணமாய்க் குடிபுகுகின்றான் நாம்பூரணப்படுவதுஎன்பது இதுவே. "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய இறைவன் நமது மெய் எனப்படும் உடல் முழுவதிலும் அணு அணுவாகக் குடிபுகும் பெற்றியை ஓர் உவமான முகத்தால் நன்கு விளக்குகின்றார் சிவவாக்கியர்

"ஐயன் வந்து புகுந்தவாறே தெங்கனே
செய்ய தெங்கிளங்குரும்பை நீர் புகுந்த
[வண்ணமே................"

என்று அருளினார் சித்தர் பெருமான் ஆ! ஆ! என்ன அழகு! என்ன அருமை! என்ன பெருமை! தெங்கின் இளம் குரும்பையுள் மறைபொருளாய் இருந்த இளநீர் அக்குரும்பை விளைவு அடைய அடைய அதனுள்ளே அணு அணுவாய் ஆக்க முற்றுப் பூரணப்பட்ட வண்ணம் எவ் வண்ணமோ அவ் வண்ணமே நமது உடலம் சாதகயோகங்களால் அமல விளைவு அடையஅடைய அதனுள்ளே எம்பெருமான் அணு அணுவாய்க் குடி புகுந்து பூரணப்படும் வண்ணமுமாம் என அவர்கூறிய அநுபவ உண்மை வியக்கற் பாலதன்றோ! மெய்யடியார் உடலில், மறைபொருளாகிய சிவம், வெளிப்படும் பெற்றி இதுவே என்க. உரை உணர்வு கடந்த சிவ பரம்பொருளைக் காணும் பெற்றியும் அடையும் பெற்றியும் எவ்வாறு? காணும் பெற்றியும் அடையும் பெற்றியும் இவ்வாறே என்க. இதுபற்றியே,

" உரையற்ற தொன்மை யுரைசெய்யு
[மூடர்காள்
கரையற்ற தொன்மைக் கரைகாண
[லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்
[குப்
புரையற் றிருந்தான் புரிசடை
[யோனே."

(9-ம் தந்திரம், வரைவுரைமாட்சி செ. 2.

என அருளிச்செய்தார் எம் அண்ணலாகிய திருமூலர் என்க.

அசுத்த பௌதிக தநு அமலமடைந்து பிணிமூப்புச் சாக்காடுகள் நீங்குதலே உண்மை நிலை என்று சுவேதாசு வதர உப நிடதம் கூறுகின்றது. திருவாசக முதலியனவும் சித்தர் நூல்களும் நுதலிய உண்மையும் இதுவே. அமயம் நேர்ந்துழி இது விளக்கிக் கூறப்படும். இவற்றால், தத்துவப் பெரியார் அநுபவ நிகழ்ச்சிகள் ஒன்றே என்பதும், திருவாசக முதலியனவும் சித்தர் நூல்களும் உப நிடதங்களும் ஒரே முடிபினை உடையன என்பதும் ஒருவாறு விளக்கப்பட்டன.

சிவம் குடி புகப்பெற்ற விமல தநுவுடைய மெய்யடியாராகிய தத்துவப் பெரியார் பாடல்கள் எல்லாம் சிவவாக்கே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. பின்வரும் பிரபல சுருதிகள் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துதல் கண்டு கொள்க.

திருவாசகம்.

" கற்போலு நெஞ்சங் கசிந் துருகக்கருணை
[யினால்
நிற்பானைப் போலவென் நெஞ்சி
[னுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்
[ஙன்
சொற்பால தானவா தோணோக்க
[மாடாமோ."

(ஷை திருத்தோணோக்கம் செ. 4)

திருவாய்மொழி.

" செஞ் சொற்கவிகாள் உயிர்காத்தாட்
[செய்மின் திருமாலிருஞ்சோலை
வஞ்சக் கள்வன்மா மாயன் மாயக்கவி
[யாய் வந்து --என்
நெஞ்சம் உயிரும் உள்கலந்து நின்றார்
[அறியா வண்ணம் என்
நெஞ்சமுமுயிரு மவையுண்டு தானே
[யாகி நிறைந்தானே."

"தானேயாகி நிறைந்தெல்லாவுலகுமுயிரும்
[தானேயாய்த்
தானேயான் என்பான் ஆகித் தன்
[னைத்தானே துதித்து-எனக்குத்

தேனேபாலே கன்னலே அமுதே திருமா
[லிருஞ் சோலைக்
கோனேயாகி நின்றொழிந்தான்
[என்னைமுற்று முயிருண்டே."

"..
பண்ணார்பாடல் இன்கவிகள் யானாய்த்
தன்னைத்தான்பாடி என்அம்மான் ,
தென்னா என்னுந் திருமாலிருஞ் சோலை
[யானே.

"எனதுரை தனதுரையாக........"

என ஞான சம்மந்தப் பெருமான் தமது தேவாரத்தில் பல இடங்களில் கூறியருளியதும் அறிக. எம்பெருமான் வடிவமாகிய மெய்வேத சாரம் எனப்படும் வேதநூல்கள் சிவமாந் தன்மை அடைந்த மெய்யடியார்கள் —இருடிகள்— முனிவர்கள் —சித்தர்களாகிய தத்துவப்பெரியார் வாயிலாகவே வெளிப்படுவனவாகும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. தத்துவப் பெரியார் சிவமே யாவர்.

"சிவனே சிவஞானி யாதலாற் சுத்த
சிவனே யெனவடி சேரவல் லார்க்கு
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே,"

என்பது திருமந்திரம்

(6-ம் தந்திரம். சிவகுரு தெரிசனம் செ 8.)

இவர் பாடல்கள் – நூல்களின் அருமை பெருமை அளவிடற்கரியன. இவற்றின் மாண்புகளை ஒன்றும் போதா அறிவிலிகளாகிய யாமா கூறவல்லம்.

தத்துவப் பெரியார் பாடல்களாகிய வேத நூல்கள் – சிவ வாக்குக்கள் சிரமேற் கொண்டு பூசிக்கற்பாலன; அகத்தூய்மை புறத்தூய்மை யோடு ஓதி உணர்தற்பாலன. தத்துவப் பெரியாரையும் அவர் அருளிய திருமறைகளையும் பூசித்தலால் திருவருட் சகாயம் உளதாகும்; குருவருள் கிடைக்கும். அதனால் மெய்யுணர்ச்சி கைவரும்; உண்மைநிலைகை கூடும்.

நால்வர் நான்மணிமாலை.

"தானே முத்திதருகுவன் சிவன் அவன்
அடியன்வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல்லார்க்கே "
" மதுரவாசகம் ஓதின்முத்தி உறுபயன்"

உடம்பின் அருமை பெருமை.

உடம்பின் அருமை பெருமை அளவிடற்கரியது. இவ்வுடம்பே உண்மைச் சாதகயோகங்களால் அமலமடைந்துழி ஞான சத்தி வடிவாகத் திகழும்.

திருமந்திரம்

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணி
லெழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற விவ்வுடற் போமப் பரத்தே.

உடலு முயிரு மொழிவற வொன்றிற்
படருஞ் சிவசத்தி தாமே பரமா
முடலைவிட் டிச்த வுயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் காக்குஞ் சிவத்தே.

(விசுவக்கிராசம் 1. 2.)

(சுத்தசாதகம். 12. 32. 59.)

இதன் அருமை பெருமை இவ்வளவிற்று என இயம்ப ஒண்ணுமோ? இதுபற்றியே இவ்வுடம்பு மெய் என்னும் திருநாமம் பெறுவதாயிற்று. இக்காயம் பொய்யன்றோ எனின், பொய் என்பதும் உண்மையே. குருவருளால் பௌதிகங்களை நிறைகண்டு பஞ்சீகரணித்து உய்தியடையும் திறனறிந்து ஒழுகவல்ல மெய்யடியார்க்கு இது பொய்யன்று மெய்யே யாகும். அன்னார்க்கு இக்காயம் துப்பு நீங்கி—அசுத்தம் நீங்கி அமலமடைந்து மெய் என்னும் தனது அரியபெரிய திருநாமம் நன்கு திகழ நிலைபெறும். கடவுளைக் கண்டு அடையப்பெற்றோர் இவரேயாவர்.

“மெய்யாகிப் பொய்மை நீக்கி வேதனையைத் துறந்து, செய்யானார் சிந்தையானே தேவர் குலக் கொழுந்தே” என்பது திருஞான சம்பந்தர் தேவாரம். “மெய்ம்மையன்பருன் மெய்ம்மை மேவினார்.” என்பது திருவாசகம். முன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்துப் பொய்மை நீக்கி—பாசம் நீக்கி மெய்ம்மை காண அறியாத உலகமாக்களுக்கு இக்காயம் பொய்யே. இவர் கடவுளைக் கண்டு அடையமாட்டார்; கடவுள் பொய்யர்க்குப் பொய்யன் மெய்யர்க்கு மெய்யன். இக்காயமாகிய ஆலம் அமுதமானால் அசுத்தம் நீங்கி அமலமடைந்தால் காலனை வென்றிடலாம் நித்யத்வமாகிய மெய்ம்மை திகழும்; கடவுட்டன்மை—சிவமாந்தன்மை உளதாகும். வீடுபேறுஉளதாகும். க + ஆயம் = காயம்—க—பசு—பசுத்துவம், அஞ்ஞானம், இருள், அசுத்தம். இக்காயமாயத்தை—அழுக்கைக் கழிக்க வேண்டியது அவசியம். “காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்” என்றார் மணிவாசகப் பெருமான். இதனைத்தான் இச்செடிசேருடலைத்தான் — இப்படிற்றூ—கையைத்தான் — இவ் அழுக்கைத்தான்—அஞ்ஞானத்தைத்தான் கழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும், சிதைக்க வேண்டும், அறுக்க வேண்டும் என்றனர் தத்துவப் பெரியார்.

(தொடரும்.)

இதுகாறும் கூறியவைகளால் தத்தவப் பெரியார் இலக்கணமும், அவர் சிவாநுபவ நிகழ்ச்சிகள் ஒன்றே என்பதும், அவர் பாடல்கள் — நூல்கள் வேத உண்மைகளே — மறைகளே என்பதும், சிவவாக்கே என்பதும், அவையெல்லாம் “தத்துவமசி” மகாவாக்கியப் பொருளாகிய அங்கலிங்க ஐக்கியம் எனப்படும் உண்மை முத்தி நிலையையே நுதலியன என்பதும் ஆசான் அருளால் அன்றி அவற்றின் உண்மைப் பொருளை அறிதல் முடியாத காரியம் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

தத்துவப் பெரியார் திருவடி வாழ்க
திருமுறைகள் வாழ்க.

தலையாய அறம்

(2–ம் வாரத்தொடர்ச்சி)

தென்புலத்தார் என்னும் பிதுரர் எங்கேயோ மிகத் தூரமான ஓரிடத்தில் வசிப்பவர் எனவும், தெய்வம் என்பது கயிலை வைகுண்டம் முதலிய ஊர்களில் வீற்றிருப்பது எனவும், நாம் அருந்தும் உணவுகளால் உயிர் வாழ்வதில்லை யெனவும், அவற்றால் சுவை இன்பமே ஒழிய வேறு பயன் இல்லை எனவும், சுற்றத்தார் என்போரால் ஆவது ஒன்றுமில்லை எனவும், ஆயினும் அவர் நம்மைச் சூழ்ந்திருப்பவராதலால் அவர் வறுமையுற்ற காலத்து அவருக்கு உதவி புரிதல் நமக்கு இன்றியமையாக் கடன் எனவும் எண்ணுவதெல்லாம் மிக்க அறியாமையால் எழுகின்ற எண்ணங்களேயாம்.

தென்புலத்தார், தெய்வம், விருந்து (அருந்தல் என்னும் உணவு), ஒக்கல் (பொருந்தல் என்னும் சுற்றம்), என்பன எல்லாம் “தான்” என்று அஃதாவது தன்னை ஒழிய வேறில்லை என்று ஒருவன் உணரவேண்டியது அவசியம் எனவும், அத்தகைய உணர்ச்சி உரன்பெற்றுழி ஆங்கு (அப்பொழுதே) அவன் செயற்பாலதலையாய அறம் அவ்வுணர்ச்சி வழி நின்று ஐம்புலத்து ஆறு ஓம்புதலே எனவும் நன்கு விளக்கிக் காட்டினார் தேவர்.

தென்புலத்தார் என்னும் பிதுரர் தென்திசையில் எங்கேயோ வெகு தூரத்தில் வசிக்கும் ஒருவகைக் கடவுட் சாதியினர் — தெய்வங்கள் என்றும் உறுதி கொண்டு அவரை நோக்கி வழிபாடுகள் புரிவது உலக சம்பிரதாயம். பிதுரர் என்னும் ஒரு வகைத் தெய்வக்குழுவினர் ஓரிடத்து வசிக்கிறார்கள் என்பது உண்மையை உணர்ந்த பெரியார் ஒப்புக்கொள்ளக் கூடிய கொள்கையன்று. ஆயினும் அன்னார் உலகியல் நோக்கி இதனைப் பொய் எனவும் கூறத் துணிபுபெறார், ஏனெனில், வேதம் சிலர்கள் பக்குவத்துக்கு ஏற்பவே உண்மையைப் பலவகையான கற்பனைகளால் அஃதாவது திரோபவமாய்க் கதை ரூபமாய் விளக்கிக்காட்டி, தானும்(அவ்வேதம்) கெடாமல், தன்னை அடுத்தவரது அஞ்ஞான இருளையும் அவரவர் இச்சை வழியே சென்று அணுஅணுவாய் நீக்கி, பக்குவம் ஏற்றபெற்றி அடைய அடையச் சிறிது சிறிதாய் முன்னே கூறிய கற்பனைகளையும் மறுத்து ஈற்றில் அவ்வுண்மை இது எனப் புலப்படுத்துகின்றதாதலால் என்க. உண்மையை உணர்ந்து அதனைக் கடைப்பிடித்து ஒழுகும் பெரியாரும், இப்பண்பினை அறிந்தவ

திருப நேயர்கட்கு அறிவிப்பு.

1. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

2. வரும் கடிதங்களை, கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாது விடவும் கூடும்.

3. பிரசுரிக்கப்படாத கடிதங்கள், கட்டுரைகள் திருப்பி யனுப்பப்படமாட்டா.

4. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்கு கடிதக்காரர்களே பொருப்பாளிகளாவர்.

மானேஜர்
"வித்தகம்"
வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India.)

ராதலால், இக்கற்பனைகளையும் புறக்கணிக்கத் துணியார்— புறக்கணிக்குமாறு பிறர்க்குக் கூறமாட்டார் என்பது ஒருதலை. ஆயினும் பக்குவர் பொருட்டு உண்மை இதுதான் எனக் கூறி அவரைத் தெருட்டுவதும் அன்னவர் இயல்பே என்பதும் மறுக்க முடியாததே. மற்று, இச்செய்யுட்கு உரை கண்ட ஆசிரியர் "பிதுராராவார் படைப்புக்காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி. அவர்க்கிடம் தென்றிசையாதலின் தென்புலத்தார் என்றார்." எனக்கூறிப் போந்தனர் அல்லவா? எனின், சிறந்த வித்துவப் பெரியாராகிய அன்னார் இவ்அரிய பெரிய தமிழ் வேதச் செய்யுட்கு உலக சம்பிரதாயம் நோக்கி அவ் உலகியலுக்கே ஒப்ப உரை கண்டாராகலின், அவர்க்கும் அஃது உண்மையில் கருத்தன்று போலும் என்றே கொள்ளற்பாற்று.

செய்தித் திரட்டு.

மலேரியாவை ஒழிக்கப் புது முறை.

மீன்களின் உபயோகம்.

மலேரியாவை ஒழிக்கும் முயற்சியில் மீன்கள் உதவியாயிருக்குமென்று,இந்தியா மலேரியா சர்வ அசிஸ்டெண்டு டைரெக்டர் லெப்டினன்ட் கர்னல் ஜி. கவல் கூறியதுபற்றி பேட்டி கண்டு பேசுகையில், டாக்டர் எஸ். எல். மோரா கூறியதாவது; மலேரியாவை ஒழிப்பதற்குப் பல விடங்களில் மீன்கள் உபயோகப்படுகின்றன. இந்தியாவிலும் இம்முறை பரீக்ஷிக்கப்படவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயமாகும். பஞ்ச்ஸே பாஞ்ச்ஸே என்ற மீன் கொசுக்களை அழித்து விடுகின்றன வென்பதை நான் நேரில் அறிவேன். 1926–ம் வருஷத்தில் இந்தியன் மியூசியம் குளத்திலுள்ள மீன்கள் பெரும்பாலும் இறந்தன. தண்ணீரில் கொசு இருப்பதே இவை சாவதற்குக் காரணமென்பதை யறிந்து மேற்கூறிய மீன்களைக் குளத்தில் கொண்டுவிட்டோம் சில தினங்களில் தண்ணீரில் கொசுக்களே இல்லாமற் போய்விட்டன. இந்த மீனுள்ள தண்ணீர் இருக்கும் பிரதேசங்களில் ஜனங்களுக்கு மலேரியாவே வருவதில்லை என்பதையும் நான் அனுபவத்தில் அறிந்திருக்கின்றேன்.

சைகோனிலிருந்து பிரஷ்டமாகும் இந்தியர்கள்.

பிரான்ஸின் செலவில் ஊருக்குத் திரும்பியனுப்ப ஒப்பந்தம்.

பிரான்ஸுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்டுள்ள ஓர் ஒப்பந்தப்படி இனிமேல் இந்தோ–சைனாவிலிருந்து பிரஷ்டம் செய்யப்படும் பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளை சென்னைக்கும், இதர ஆசியாக்காரர்களை ஹாங்காங், சிங்கப்பூருக்கும் பிரஞ்சு கவர்மென்டார் தங்கள் சொந்தச் செலவில் கொண்டுபோய் விடவேண்டும்; அதே மாதிரி சந்தர்ப்பத்தில் பிரஞ்சு இந்தோ–சைனாப் பிரஜைகளை பிரிட்டிஷ் இந்திய கவர்ன்மெண்டாரும் சைகோன் அல்லது ஹைபாங்குக்குக் கொண்டுபோய்விட வேண்டும்.

தபால் முத்திரையைவிட சிறிய புத்தகம்.

1567 ரூ பொக்கிஷம் 45 பவுனுக்கு விற்கப்பட்டது

1303–1343 வசித்த இத்தாலிய பேட்லாக் கவியினுடைய கவிதை ஒருவர் இந்த சிறிய புத்தகத்தில் எழுதி வைத்தார். அது 110 பக்கங்கள் கொண்டது. எழுத்துக்களை பூதக் கண்ணாடியின் உதவியினால் தான் வாசிக்ககூடும். பாட்டுகளை தெளிவிக்க பல சிறியபடங்கள் உண்டு. சரிகையால் இழைக்கப்பட்ட அட்டைகளால் கட்டப்பட்டுள்ளது. ஷை புத்தகத்தை லண்டனில் ஒரு பிரபல புஸ்தக வியாபாரி வாங்கினர்.

"வித்தகம்"

சந்தா விபரம்.

வருட சந்தா
உள் நாட்டிற்கு முன் பணம் ரூ.3–0–0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ 4-0-0

வித்தக நிலையம்
புதுச்சேரி.
(Fr. India.)

ஏஜண்டுகள் தேவை

எமது "வித்தகம்" என்கிற வாரப் பத்திரிகையை விற்பனை செய்ய ஒவ்வொரு ஊரிலும் தக்க ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

"வித்தகம்"
புதுச்சேரி.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R. Nagarattinam.